**அசல் வழக்கு எண். 244/2018** **தேதி-27.06.2025**

**பி.வா.சா.2- மணி (எ) மாரியப்பன்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. பி.சா.ஆ.6 ஆவணம் சர்வே எண்.75 யை பொறுத்து சங்கப்பிள்ளை என்பவர் முனியம்மாளுக்கு எழுதி கொடுத்த கிரையம் ஆவணம் என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ-6 ஆவணத்தில் சர்வே எண்.75 நிலத்தின் மேல்கோடியில் தென்வடலாக நாங்கள் நடந்து கொண்டும் பாதை பாத்தியம் உள்பட என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.5, பி.சா.ஆ-7, பி..சா.ஆ-8 ஆகிய ஆவணங்களிலும் சர்வே எண்.75 யை பொறுத்து பாதை பாத்தியம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.75 ல் பட்டா பாதை என குறிப்பிடும் பாதை தாவா ஆ அட்டவனை பாதை என்றால் சரிதான். நான் சொல்லும் சர்வே எண்.75 ற்கு உண்டான பட்டா பாதை பாத்தியத்தை பொறுத்து வாதி எவ்வித உரிமையும் கோரவில்லை சரியல்ல.

2. பட்டா பாதை எந்த திசையில் உள்ளது என்றால் கிழமேல் நோக்கியும் தென்வடல் நோக்கியும் உள்ளது. மேற்படி கிழமேல் பட்டா பாதை பஞ்சாயத்து பாதையுடன் சேர்கிறது என்றால் சரிதான். மண்பாதையுடன் சேர்கிறது. மேற்படி தென்வடல் பட்டா பாதையானது எனது இடத்தை ஒட்டி அமைந்துள்ள முனியம்மாளின் மகன் பழனிசாமி என்கிற முருகன் நிலம், பொம்ம நாயக்கர், செல்வராஜ் ஆகியோரின் நிலம் வழியாக செல்கிறது என்றால் சரிதான். மேற்படி பொம்ம நாயக்கர் மகன் தான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியான செல்வராஜ் என்றால் சரிதான். மேற்படி பழனிசாமி என்கிற முருகன் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி தென்வடல் பட்டா பாதை தான் தாவாவின் ஆ அட்டவனை பாதையாக காண்பிக்கப்பட்டுள்ளதாக வாதி சொல்கிறார் என்றால் சரிதான்.

3. சர்வே எண்.77 வாதியின் நிலம் என்றால் சரிதான். மேற்படி அவரின் உரிமையை பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதியின் முன்பாஸ்யதர்கள் 1978 ல் சர்வே எண்.77 பொறுத்து ஏற்படுத்திய கிரைய பத்திரத்திலேயே அதற்குண்டான பாதை பாத்தியத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 77 யை பொறுத்த வா.சா.ஆ.4 ஆவணத்திலும் மேற்படி பாதை பாத்தியத்தை குறிப்பிட்டு

சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். தாவா அ அட்டவனை சொத்தை பொறுத்து வருவாய் துறை ஆவணங்கள் வாதியின் தகப்பனாரின் பெயரில் உள்ளது என்றும் அவர் தான் பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். சர்வே எண்.77 உள்ள இடத்தை வாதி தான்அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

4. சர்வே எண்.75 யை பொறுத்து வா.சா.ஆ.10 ஆவணத்தில் நான்குகெல்லை விவரத்தில் தென்வடல் வண்டிப் பாதை நீங்கலாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தென்வடல் வண்டிப் பாதையானது தாயாம்மாள், முனியம்மாள், காளியப்பன் ஆகியோருக்கு சொந்தமானது. வாதி கூறுவது போல் மேற்படி தாயாம்மாள், முனியம்மாள், காளியப்பன் ஆகியோர் வாதியின் பாதை பாத்தியத்தை எவ்வகையிலும் தடை செய்யவில்லை என்று கூறுகிறார் என்றால் சரியல்ல. மேற்படி நபர்களுக்காகவும் சேர்த்து தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். எதிர்வழககுரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் தயார் செய்தது என்றால் சரிதான்.

5. அதிலுள்ள விவரங்களை நான் படித்து பார்த்த பின்னிட்டு தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாவா தோராய வரைபடத்தில் தாவா பாதை உள்ள இடம் பிரதிவாதிகளுக்கு மட்டும பாத்தியப்பட்ட நிலம் என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் பத்தி எண்.29 ல் நான் சொல்லியுள்ள பூஸ்துதி வண்டிப் பாதை சர்வே எண்.75 ல் உள்ள கிழமேல் பட்டா பாதை என்றால் சரிதான். இவ்வழக்கில் உள்ள பிரதிவாதிகள் அனைவரும் அவசிய தரப்பினர்கள் என்றும், அவர்களை தவிர வேறு யாரும் அவசிய தரப்பினர்கள் இல்லை என்றால் சரியல்ல. வாதி சொல்வது போல் தாவா ஆ அட்டவனை பாதை வாதி தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களிலும் மற்றும் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களிலும் உள்ளது என்றும், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. தென்வடல் பாதை வாதியும், அவரின் முனபாத்தியஸ்தர்களும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்.75 ல் உள்ள தென்வடல் பாதையை நான் பயன்படுத்துகிறேனா என்றால் பயன்படுத்தவில்லை.

6. மேற்படி இடத்தில் தற்போது இனிமேல் எள் போட்டு உழவடை

செய்யப்போகிறோம். மேற்படி தென்வடல் பாதையை விவசாயம் செய்யும் போது அதன் பங்குதாரர்கள் அதனை அனுசரித்து செல்வார்கள் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் வாதியோ, வாதியின் முன்பாத்தியஸ்தர்கள் தரப்பினர்கள் இல்லை என்றும், அதனால் மேற்படி ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 2 ,3 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு வாதி ஆ அட்டவனை பாதையை பயன்படுத்துவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரியல்ல. அவர்களுக்காகவும் சேர்த்து தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். அவர்களை சாட்சியாக விசாரிக்க அவசியமில்லை. 2, 3 மற்றும் 5 பிரதிவாதிகளை சாட்சியாக விசாரித்தால் தாவாவின் உண்மை நிலை தெரிய வந்துவிடும் என்றால் சரியல்ல.

7. மேற்படி நபர்களை பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகளாக விசாரிக்க எவ்வித ஆட்சபேனையும் இல்லை. மேற்படி நபர்களை சாட்சியாக விசாரிப்போமா என்றால் விசாரிப்போம். தாவா ஆ அட்டவனை பாதை வாதியின் நீண்ட காலமாக அனுபவத்தில் இருப்பதால் அவருக்கு அதில் பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**